IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.

**O.S.No.165/2016**

DEPOSITION OF WITNESS - DW1

**பி.வா.சா. 1.செந்தில் – த.பெ.ஜெயராமன்**

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif on 01.08.2026 in accordance with the provisions of Act XX141.**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

1. வாதி ஈஸ்வரி 2ம் பிரதிவாதியான எனது தாயாருடன் பிறந்தவர் என்றால் சரிதான். ஆறுமுகம் நாயக்கர் மற்றும் சீனியம்மாள் ஆகியோர்களின் வாரிசு வாதி மற்றும் 2ம் பிரதிவாதி மட்டுமே என்றால் சரிதான். வேறு வாரிசுகள் கிடையாது என்றால் சரிதான். இந்த வழக்கில் 1ம் பிரதிவாதியான சீனியம்மாள் இறந்து 2வருடங்கள் ஆகும் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் முகவர் என்ற நிலையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

2. 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்த விபரம் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கைரேகைதான் பதிப்பார் என்றால் சரிதான். எதிர்வழக்குரையின்படிதான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 5ல், தாவா சொத்துக்களை வாய்மொழியாக 1ம் பிரதிவாதி எனது தாயாரான 2ம் பிரதிவாதிக்கு வாய்மொழி தானமாக கொடுத்துவிட்டார் என்று காணப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரை விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தானது வீடா, காலி நிலமா என்றால் தெரியாது. தாவா சொத்து வீடு என்பதாலும் அது அசையா சொத்து என்பதாலும் அதனை தானம் கொடுக்கமுடியாது என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள 21.06.1973 ஆவணம் குறித்து எனக்கு நேரடியாக

தெரியாது என்றால் சரிதான். எனது குடும்பத்தில் நடந்த விஷயங்கள் பொறுத்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெருமாளக்காவிற்கு எழுதிக் கொடுத்த 27.06.1981 ஆவணம் தெரியும் என்றால் ஓரளவு தெரியும்.

4. வாதி வழக்கு விவரம் தெரியுமா என்றால் சொத்து கேட்டு தாக்கல் செய்துள்ளார். எனது அம்மாவிற்குள்ள உரிமை எனது அம்மாவின் சகோதரியான வாதிக்கும் உள்ளது என்றால் சரிதான், எனது அம்மாவின் சகோதரியான வாதிக்கு உரிய பாத்தியத்தை எனது பாட்டி உயிருடன் இருக்கும்போதே கொடுத்துவிட்டார். 1ம் பிரதிவாதி வாதிக்கு எந்த பாகமும் கொடுக்கவில்லை என்பது எனது தாயாரான 2ம் பிரதிவாதியை விசாரித்தால் தெரிய வரும் என்பதாலேயே 2ம் பிரதிவாதியை விசாரணையை செய்யவில்லை என்றால் எனது தாயாருக்கு பார்வை தெரியவில்லை.

5. எனது தாயாருக்கு பார்வை தெரியவில்லை என்பதற்கு ஆதரவாக மருத்துவசான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதியால் சாட்சியம் அளிக்க முடியும் என்றால் சரியல்ல. எனக்கு வழங்கப்பட்ட அதிகார ஆவணத்தில் நான் சாட்சியம் அளிக்கவும் கையெழுத்து செய்யவும் , வழக்கை நடத்தவும் மட்டுமே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றாலும் ஆவணத்தை பற்றி சாட்சியம் அளிக்க அதிகாரம் வழங்கப்படவில்லை என்றால் சரிதான்.

6. 2ம் பிரதிவாதிக்கும் வாதிக்கும் சண்டை ஏற்பட்டு ஆஸ்டின்பட்டி காவல் நிலையதில் இருதரப்பினரும் புகார் கொடுத்தார்கள் என்றாலும் மேற்படி சண்டையானது சொத்துக்கானது என்றால் சரிதான். சொத்துக்களை பற்றிய சங்கதி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதியின் பாகத்தை வாதிக்கு கொடுக்கலாம் என்றால்

சரியல்ல. வாதிக்குரிய பாகத்தை கொடுத்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எப்போது பாகம் கொடுக்கப்பட்டது என்றால் நினைவில்லை. வாதி வழக்கு அனுமதிக்கபட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :-</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

sd/(E.Manikandan)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.